




# சென்னையில் தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டம்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**சென்னை, பிப். 5-**

**சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற்றது. தேர்தல் அறிக்கை குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தி.மு.க. செய்தி தொடர்பு குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் கோவி.செழியன், டி.ஆர்.பி. ராஜா, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.**

கூட்டத்தில், தமிழ்நாடு அருந்ததியர் முன்னேற்றப் பேரவை, ஆதிதிராவிடர் மகாஜனசபை, அனைத்து முதலியார் வேளாளர் சங்கங்களின் பேரவை, இளைஞர் படுகர் சங்கம், மக்கள் மறுமலர்ச்சி கழகம், தமிழ்நாடு வீரபாண்டிய கட்டபொம்மன் பண்பாட்டுக் கழகம் உள்ளிட்ட சமுதாய பிரதிநிதிகள், வணிகர்கள், மீனவர்கள், பொதுமக்கள் என பலரும் தங்களது கோரிக்கைகளை தெரிவித்து, மனுக்களை அளித்தனர்.

கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி., தி.மு.க. தேர்தல் அறிக்கை மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் என்றும் அனைத்துத் தரப்பினரிடமும் கருத்துகளை கேட்டறிந்துள்ளதாகவும் கூறினார்.

மேலும், நாடாளுன்றத்தில் 8 எம்.பி.க்கள் கூட்டத் தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டது ஏற்கமுடியாது என்றும் கூறினார்.



## ஜல்லிக்கட்டு விழா: அமைச்சர் பி.மூர்த்தியின் பிரமாண்ட ஏற்பாட்டில்!

# சோழவந்தான் தொகுதி சார்பில் மாபெரும் ஜல்லிக்கட்டுப் போட்டி!

## அலங்காநல்லூர் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்றது!












கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் – வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில் தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிக்கு பெருமை சேர்க்கும் வகையில் சட்டமன்ற தொகுதி வாரியாக அடுத்தடுத்து ஏழு ஜல்லிக்கட்டு விழா நடைபெற்று வருவதின் ஒரு பகுதியாக சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்கான ஜல்லிக்கட்டுப் போட்டி அலங்காநல்லூர் கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், ஜல்லிக்கட்டு காளை உரிமையாளர்கள், மாடுபிடி வீரர்கள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.